(6 pages) Reg. No. : .....

Code No. : 30005 **Sub. Code : E 1 TL 11/ F 1 TL 11**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2025

முதல் பருவம்

பகுதி I — தமிழ்

பொதுத்தமிழ் I — தமிழ் இலக்கிய வரலாறு — I

(For those who joined in July 2023 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)
அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்க.

1. பைந்தமிழ் எத்தனை பிரிவுகளை உடையது?

(அ) மூன்று (ஆ) ஐந்து

(இ) ஏழு (ஈ) இரண்டு

2. உரைநடை இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?

(அ) சங்கர நமசிவாத் (ஆ) அகத்தியர்

(இ) ஆறுமுகம் (ஈ) வீரமாமுனிவர்

3. சந்தன மரத்தில் கட்டப்பட்ட இனிய தேன் கூடு போன்றது எனத் தலைவனின் சிறப்பைக் கூறுவது எது?

(அ) பேச்சு (ஆ) நட்பு

(இ) வீரம் (ஈ) நற்குணம்

4. பூரிக்கோ தொகுத்த நூல் எது?

(அ) நற்றிணை (ஆ) அகநானூறு

(இ) குறுந்தொகை (ஈ) புறநானூறு

5. பொறாமை என்பதின் வேறுபொருள் யாது?

(அ) கனிவு (ஆ) ஆசை

(இ) அழுக்காறு (ஈ) நன்றியுணர்வு

6. முன்றுறை அரையனார் எழுதிய நூல் எது?

(அ) பழமொழி (ஆ) நாலடியார்

(இ) இன்னா நாற்பது (ஈ) இனியவை நாற்பது

7. முதல் காப்பியம் என்று அழைக்கப்படுவது எது?

(அ) சிலப்பதிகாரம் (ஆ) சீவகசிந்தாமணி

(இ) மணிமேகலை (ஈ) வளையாபதி

Scanned with OKEN Scanner

8. ஐம்பெரும் காப்பியங்களில் பௌத்த சமயக் காப்பியம் எது?

(அ) சீவகசிந்தாமணி

(ஆ) சிலப்பதிகாரம்

(இ) பெருங்காப்பியம்

(ஈ) மணிமேகலை

9. 'நாமார்க்கும் குடியெல்லாம் நமனை அஞ்சோம்' எனப் பாடியவர் யார்?

(அ) சுந்தரர் (ஆ) திருநாவுக்கரசர்

(இ) ஞானசம்பந்தர் (ஈ) மாணிக்கவாசகர்

10. ஆண்டாளின் இயற்பெயர் யாது?

(அ) கோதை (ஆ) சரஸ்வதி

(இ) மீனாட்சியம்மை (ஈ) மகாலட்சுமி

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

11. (அ) ஒரு, ஓர் வரும் இடங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பன்னிரு ஆழ்வார்களில் முதல் ஆழ்வார்கள் குறித்து விளக்குக.

12. (அ) முல்லைப்பாட்டில் பாசறை அமைப்பு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆடர்வர்களைப் பொறுத்து நாட்டின் நிலை என்ற ஔவையாரின் கருத்துக்கள் யாவை?

13. (அ) மனிதன் வாழ்வில் இனிது என்று உணர்தலுக்குரிய செய்தியைப் பூதஞ்சேந்தனார் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) நாலடியார் கூறும் கல்வியின் சிறப்புகள் யாவை?

14. (அ) மனதால் கோவில் கட்டிய 'பூசலார் நாயனாரின்' சிறப்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) பாண்டியன் அவை வாயிற்காவலன் கண்ணகியின் சீற்றத்தை எவ்வாறு எடுத்துரைத்தார்?

15. (அ) வீட்டுலக அனுபவத்தைப் பட்டினத்தார் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) கடுவெளிச் சித்தர் மனிதன் செய்யக்கூடாதவை என எதனைக் குறிப்பிட்டுள்ளார்?

Scanned with OKEN Scanner

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

16. (அ) வல்லினம் மிகும் இடங்கள் எவையேனும் எட்டினைச் சான்றுடன் எழுதுக.

(அல்லது)

(ஆ) கிறித்தவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டினை விளக்குக.

17. (அ) கபிலரின் 'சுடர் தொடீஇ கேளாய்' என்ற பாடலின் திணை, துறை, கூற்று விவரி.

(அல்லது)

(ஆ) கார்கால வருணனை குறித்து முல்லைப்பாட்டு வழி கட்டுரைக்க.

18. (அ) பட்டறிவின் வெளிப்பாடு - பழமொழிகள் என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) திருக்குறளில் 'அறன் வலியுறுத்தல்' குறித்து விவரி.

19. (அ) 'பாத்திரம் பெற்ற காதை' வழி அறியலாகும் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) முகமது நபியிடத்தில் மான் செய்த வேண்டுகோள் குறித்தாய்க.

20. (அ) திருமூலரின் 'அன்புடைமை' குறித்துத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) கடுவெளி சித்தர் கூறியுள்ள வாழ்வியல் நெறிகள் யாவை?

Scanned with OKEN Scanner

(6 pages) **Reg. No. : .....**

Code No. : 30007 **Sub. Code : E 1 TL 31/ F 1 TL 31**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2025.

மூன்றாம் பருவம்

பகுதி I — தமிழ்

பொதுத்தமிழ் III — தமிழக வரலாறும் பண்பாடும்

(For those who joined in July 2023 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. உலகின் மிகப்பழமையான நிலப்பகுதி என்று நிலவியலாளர்கள் வரையறுத்துள்ள பகுதி

(அ) வடஇந்தியா (ஆ) தென் இந்தியா

(இ) ஆப்பிரிக்கா (ஈ) சீனா

2. மதுரை மிஷனின் சரித்திரத்தை மாற்றியவர்

(அ) ஜி. யு. போப் (ஆ) வீரமாமுனிவர்

(இ) கால்டுவெல் (ஈ) ராபர்ட்-டி-நொபிலி

3. தென்மதுரை எந்தப் பாண்டிய மன்னன் ஆட்சிக்காலத்தில் அழிந்தது?

(அ) சுந்தர பாண்டியன்

(ஆ) வடிவல்ம்ப நின்ற பாண்டியன்

(இ) கூன் பாண்டியன்

(ஈ) செண்பகப் பாண்டியன்

4. தேவதாசி ஒழிப்பு முறைச்சட்டம் கொண்டு வந்த ஆண்டு

(அ) 1947 (ஆ) 1949

(இ) 1942 (ஈ) 1944

5. கட்டபொம்மனை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்த மன்னன்

(அ) வீர பாண்டியன்

(ஆ) விஜய ரகுநாத தொண்டைமான்

(இ) சொக்கநாத நாயக்கர்

(ஈ) மாறவர்மன்

Scanned with OKEN Scanner

6. ஜமீன்தாரி முறையை ஒழித்த முதலமைச்சர் யார்?

(அ) அண்ணாதுரை

(ஆ) இராஜாஜி

(இ) பி. எஸ். குமாரசாமி ராஜா

(ஈ) ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியார்

7. சோழ மரபினர் எக்குலத்தைச் சேர்ந்தவர்கள்?

(அ) சூரிய குலம் (ஆ) சந்திர குலம்

(இ) ரகு குலம் (ஈ) வீர குலம்

8. போரில் பிரங்கிகளை முதன்முதலில் பயன்படுத்திய முகம்மதிய அரசன்

(அ) அக்பர் (ஆ) ஜஹாங்கீர்

(இ) பாபர் (ஈ) இப்ராகிம் லோடி

9. 'நடராச முதலியார்' எடுத்த புராணத்திரைப்படம்

(அ) கிருஷ்ண லீலை (ஆ) தசாவதாரம்

(இ) கர்ணன் (ஈ) கீசகவதம்

10. புறப்புண்பட்டு நாணி வடக்கிருந்த மன்னன்

(அ) சேரன் செங்குட்டுவன்

(ஆ) சேரன் பெருஞ்சேரலாதன்

(இ) உதயஞ் சேரலாதன்

(ஈ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

11. (அ) பழைய கற்காலம் குறித்து ஆய்க.

(அல்லது)

(ஆ) புதிய கற்காலம் குறித்து விளக்குக.

12. (அ) இரண்டாம் வரகுண பாண்டியனின் ஆட்சித் திறத்தை வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) முசுகுந்தச் சோழனின் வரலாற்றுச் சிறப்பினை எடுத்துரைக்க.

13. (அ) ஆங்கிலேயரின் வருகை குறித்து தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) டச்சுக்காரர்கள் பற்றி விளக்குக.

14. (அ) ஜஹாங்கீர் தனது ஆட்சியில் பின்பற்றப்பட வேண்டியனவாகப் பிறப்பித்த ஆணைகளை வரிசைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) மராட்டிய மன்னன் ஏகோஜி பற்றி குறிப்பு வரைக.

Scanned with OKEN Scanner

15. (அ) சுதந்திரத்திற்குப் பின் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சியினைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) காற்புள்ளி, அரைப்புள்ளி மற்றும் முற்றுப்புள்ளி குறித்து விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

16. (அ) அறத்தொடு நிற்றல் குறித்து தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சங்கத் தமிழரின் வாணிபம் பற்றி நீவிர் அறிவன யாவை?

17. (அ) தமிழகத்தில் நடைபெற்ற சேர மன்னர்களின் ஆட்சி முறையினை விவரித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) பாளையக்காரர்களின் ஆட்சி சிறப்பை விவரி.

18. (அ) நூர்ஜஹானின் ஆளுமைத் திறத்தை வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சங்க காலத்தில் நிலவிய சாதிமுறை குறித்து விவரித்து வரைக.

19. (அ) மொழி பெயர்ப்பும் அதன் வகைகளும் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு பற்றி விவரிக்க.

20. (அ) சோழர்களின் ஆட்சி வரலாறு குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சுதந்திரத்திற்குப் பின் தமிழகத்தில் பதவியேற்ற முதலமைச்சர்களைப் பட்டியலிட்டு அவர்தம் பணிகளைத் தொகுத்துரைக்க.

———————

Scanned with OKEN Scanner